**செ.வெ.எண்-21** **நாள்-08.01.2022**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொரோனா மற்றும் ஒமைக்ராகன் வைரஸ் நோய்த் தொற்று பரவலை தொடர்ந்து கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு **10.01.2022** முதல் திங்கள் தோறும் நடைபெறும் மக்கள் குறைத்தீர்வு நாள் கூட்டங்கள், கிராம அளவில் நடைபெறும் பட்டா சிறப்பு முகாம்கள், விவாசாயிகள் குறைத்தீர்வு நாள் கூட்டங்கள், மனுநீதி நாள் திட்ட முகாம்கள் ஆகியன அரசிடமிருந்து மறு உத்தரவு வரும் வரை நடைபெறாது. எனவே, பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகள் தொடர்பான விண்ணப்பங்களை தபால்கள் மூலமாக அனுப்பிவைக்கலாம்.

மேலும் https://cmhelpline.tn.gov/portal/en/signin என்ற இணையதளம் முகவரியில் விண்ணப்பங்கள் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் இந்த இணையதள வசதியினை பயன்படுத்தி மனுக்கள் அனுப்பிவைக்குமாறும், மாவட்ட நிர்வாகத்தின் அனைத்து கோவிட் தடுப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்குமாறும் அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**